(81 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

—ஏதுமில்லை—

இணைப்பு

இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டுள்ள 'தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம், 2003', பன்னிரண்டாவது நிதிக் குழு மற்றும் பதின்மூன்றாவது நிதிக் குழுவினால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப திருத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 3(1) பிரிவின்படி, மாநில அரசு, வரவு செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும் சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, நிதிநிலைக் குறியீடுகளான, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை குறித்த இலக்குகளை வரும் சில ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டு, அதற்கான அனுமானங்களை விளக்கி, இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். மேலும், இச்சட்டத்தின்படி, நடப்பு நிதிநிலைப் போக்குகளையும், அரசு மேற்கொண்டுள்ள கொள்கை முடிவுகளையும் கருத்தில் கொண்டு, 2011–2014 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிநிலை பற்றிய கணிப்புகளை உள்ளடக்கிய இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்தப் பேரவையின்முன் வைக்கப்படுகிறது.

நோக்கங்கள்

2. பொருளாதார வளர்ச்சி, சமூக நலன் மற்றும் நிதிநிலையைப் பேணுதல் ஆகியவற்றிற்கு சம முக்கியத்துவம் அளித்து, இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்ட இலக்குகள் எய்தப்படும் வகையில் வேளாண்மை, கட்டமைப்பு முதலான முக்கியத் துறைகளுக்கு தொடர்ந்து அதிக அளவில் ஒதுக்கீடு செய்யப்படும். அதே நேரத்தில், பதின்மூன்றாவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ளவாறு 2011–2012 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறையை முற்றிலும் நீக்குவதற்கும், நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 5

தற்போதைய நிலை

3. *ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதாலும், அரசு செயல்படுத்திவரும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான செலவு அதிகரித்திருப்பதாலும், 2010–2011 ஆம் ஆண்டில், ரூபாய் 3128.79 கோடி வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் ரூபாய் 17,607.71 கோடி நிதிப் பற்றாக்குறை ஏற்படும். பொருளாதார நிலை படிப்படியாக சீரடைந்து வருவதால் வரும் நிதியாண்டில் ரூபாய் 438.78 கோடி வருவாய் உபரி ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2011–2012 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டம் ஆகும். இந்த அரசால், தொடங்கப்பட்ட பல்வேறு அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்கள் பெரும்பாலும் முடிவடையும் தருவாயில் உள்ளதால், வரும் நிதியாண்டிற்கான மூலதனச் செலவு குறைவாக உள்ளது. இதன் விளைவாக, நிதிப் பற்றாக்குறை ரூபாய் 13506.84 கோடி என்ற அளவில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.32 சதவீதமாக இருக்கும். இது, பதின்மூன்றாவது நிதிக் குழு வரையறுத்துள்ள அளவுகளுக்குள் அமைந்துள்ளது. இக்கணிப்பு, 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் அதிகரிக்கக் கூடும்.*

4. *அரசு தனது கடன் பொறுப்புகளை மிகக் கவனத்துடன் நிருவகித்து வருகிறது. சேம நல நிதி முதலிய பொறுப்புகளை உள்ளடக்கிய மாநில அரசின் மொத்தக் கடன் 31–3–2006 அன்று ரூபாய் 57,457 கோடியாக இருந்தது. இது 31–3–2011–ல் ரூபாய் 1,01,541 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2006–2007 முதல் 2010–2011 வரையான ஐந்தாண்டுகளில் கடன் பொறுப்புகளின் உயர்வு ரூபாய் 44,084 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதே காலகட்டத்தில் மொத்த மூலதனச் செலவினங்கள் ரூபாய் 44,667 கோடியாக உள்ளது. இது திரட்டப்பட்ட கடன் அனைத்தும் பயன் அளிக்கக் கூடிய நோக்கங்களுக்காக செலவிடப்பட்டுள்ளதைக் காட்டுகிறது. 2005–2006 ஆம் ஆண்டின் இறுதியில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 22.29 சதவீதமாக இருந்த கடன் பொறுப்புகளின் அளவு, 2010–2011 ஆம் ஆண்டு இறுதியில் 19.58 சதவீதமாகக் குறையும்.*

2011 பிப்ரவரி 5]

5. தமிழ்நாடு தனது கடன் பொறுப்புகளை முறையாக நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் அதற்கு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். 31–3–2010 அன்றுள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு மொத்த வருவாய் வரவுகளில் 10.82 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.48 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதமோ இதில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். 31–3–2010 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அரசு உத்தரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, மொத்த வருவாய் வரவுகளில் 2.32 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.32 சதவீதமாவும் உள்ளது. ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு மட்டுமே புதிய உத்தரவாதங்கள் அளிக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எதிர்காலக் கணிப்புகள்

வருவாய்க் கணக்கு வரவுகள்

மாநில அரசின் சொந்த வரி வருவாய்

6. 2010–2011 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் விகிதம் 9.47 சதவீதமாக இருக்கும். 2010–2011 ஆம் ஆண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூபாய் 49,125 கோடி எனவும் 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 53,783 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

7. 2011–2012 ஆம் ஆண்டு இடைக்கால வரவு—செலவுத் திட்டத்தில், வணிக வரிகளின் வரவு ரூபாய் 33,394 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2010–2011 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைவிட 10 சதவீத வளர்ச்சியைக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் 18 சதவீத வளர்ச்சியும் 2013–2014 ஆம் ஆண்டில் 15 சதவீத வளர்ச்சியும் கணக்கில்

8. 2011–2012 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூபாய் 8,935 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2010–2011 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 13 சதவீதம் கூடுதலாகும். இனிவரும் ஆண்டுகளுக்கும் 15 சதவீத அளவில் வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

9. பொருளாதாரம் சீரடைந்து வருவதன் பயனாக முத்திரைத்தாள் தீர்வை 2010–2011 ஆம் ஆண்டில் 25 சதவீதம் அதிகரித்துள்ளது. 2011–2012 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் இது ரூபாய் 5,856 கோடியாகும். இத்தொகை 2010–2011 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டை விட 27 சதவீத வளர்ச்சியைக் கொண்டுள்ளது. அடுத்துவரும் ஆண்டுகளில் இத்தலைப்பின்கீழ், 15 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

10. வரும் ஆண்டில், மோட்டார் வாகன வரிகள் ரூபாய் 3,033 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆண்டுகளுக்கு இதில் 15 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

வரி அல்லாத வருவாய்

11. வரி அல்லாத வருவாய், 2011–2012 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 4,280 கோடியாகும். மொத்த வருவாய் வரவுகளில், மாநிலத்தின் வரி அல்லாத வருவாயின் பங்கு 5.42 சதவீதமேயாகும். வரும் ஆண்டுகளில் இது 3 சதவீத அளவிற்கு வளரும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு

12. மத்திய அரசு பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழக அரசின் பங்கு, சேவை வரியைப் பொறுத்தவரையில்

2011 பிப்ரவரி 5]

5.374 சதவீதத்திலிருந்து 5.047 சதவீதமாகவும், ஏனைய வரிகளைப் பொறுத்தவரையில், 5.305 சதவீதத்திலிருந்து 4.969 சதவீதமாகவும் குறைத்து பதின்மூன்றாவது நிதிக் குழு நிர்ணயித்துள்ளது. பொருளாதார வளர்ச்சியினால் மத்திய வரிகளின் வசூல் அதிகரித்ததன் காரணமாக, நமது மாநிலத்திற்கான மத்திய வரிகளின் பங்கு 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 13,375 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி, 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் 15 சதவீதமாக கணக்கிடப்பட்டுள்ளது.

மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்:

13. பல்வேறு திட்டப் பணிகளுக்கான மானியங்கள் மற்றும் பதின்மூன்றாவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள மானியங்களின் அடிப்படையில் 2011–2012 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூபாய் 7,445 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வருவாய்க் கணக்கில் செலவுகள்

14. 2011–2012 ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூபாய் 78,443 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2010–2011 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளைவிட 4.45 சதவீதம் அதிகமாகும். இந்த அரசு அறிவித்திருந்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் போன்ற சில பெரிய திட்டங்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதால், இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ள வருவாய்க் கணக்கில் செலவுகளின் மிதமான வளர்ச்சியே காணப்படுகிறது. இது, திருத்த வரவு–செலவுத் திட்டத்தின்போது அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக வருவாய்க் கணக்கில் செலவுகள் 2012–2013 ஆம் ஆண்டில் 12.5 சதவீதமாகவும் 2013–2014 ஆம் ஆண்டில் 13 சதவீதமாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

15. 2011–2012 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், சம்பளம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் மொத்த வருவாய்க் கணக்கில் 49 சதவீதமாகும். மாநில

அரசின் சொந்த வரி வருவாயின் சதவீதத்தைப் பொறுத்தவரையில் இது 72 சதவீதமாக இருக்கும்.

16. 2005–2006 ஆம் ஆண்டு மொத்த வருவாய் வரவுகளில் 13.54 சதவீதமாக இருந்த வட்டி செலுத்தும் விகிதம் 2010–2011 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளில் முறையே 11.07 மற்றும் 11.18 சதவீதமாக குறையும்.

முடிவு

17. இந்த அரசு, பொருளாதார மந்த நிலையைச் சமாளித்து, பணியாளர்களுக்காக ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியபோதிலும், கடந்த ஐந்தாண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை குறித்து மத்திய அரசு நிர்ணயித்த அனைத்து இலக்குகளையும் எய்தியுள்ளது.

18. 2011–2012 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாநிலத்தின் வருவாய் உபரி நிலையை அடைவதோடு, நிதிப் பற்றாக்குறை, 3 சதவீதத்திற்கும் குறைவாகவே இருக்கும். பதின்மூன்றாவது நிதிக் குழுவும், நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டமும் மாநிலத்தின் நிதிச் சீரமைப்பிற்காக வகுத்துள்ள பாதையின் அடிப்படையில் 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளுக்கும் இதே போக்கு எதிர்பார்க்கப்படுகிறது.

19. இந்த அரசு, கடன் பொறுப்பு – மாநில மொத்த உற்பத்தி மதிப்பு விகிதத்தை 2011–2012 ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் கணித்துள்ளவாறு 20.46 சதவீதம் அளவில் வைத்திருக்க, கடன் இருப்பு மற்றும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தின் நீடித்த தன்மையைத் தொடர்ந்து கண்காணித்து வரும். இந்த விகிதம் பதின்மூன்றாவது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள 24 சதவீதத்தைவிடக் குறைவாகும்.

— — —

அட்டவணை – இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்#

(ரூபாய் கோடியில்) (தற்போதைய விலையில்)

பிப்ரவரி 2011	2009–2010 கணிப்புகள்.	2009–2010 கணக்குகள்.	2010–2011 கணிப்புகள்.	2010–2011 திருத்த மதிப்பீடு.	2011–2012 கணிப்புகள்.	2011–2012 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.	2012–2013 கணிப்புகள்.	2013–2014 கணிப்புகள்.
வருவாய்	57,316.66	55,397.75	63,419.01	71,967.99	72,770.26	78,882.02	91,441.94	1,04,219.74
மாநிலத்தின் சொந்த வருவாய்	41,377.15	41,127.34	46,639.21	53,400.11	52,942.82	58,062.73	67,871.99	77,523.76
வரி	38,129.51	36,546.67	43,400.25	49,125.11	49,311.60	53,782.55	63,463.41	72,982.92
வரி அல்லாதவை	3,247.64	4,580.67	3,238.96	4,275.00	3,631.22	4,280.18	4,408.59	4,540.84
மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை	15,939.51	14,270.41	16,779.80	18,567.88	19,827.44	20,819.29	23,569.95	26,695.98
பங்கிடப்பட்ட வரிகள்	10.921.14	8,756.19	10,233.24	11,757.04	11,961.94	13,374.58	15,380.77	17.687.88
உதவி மானியம்	5,018.37	5,514.22	6,546.56	6,810.84	7,865.50	7,444.71	8,189.18	9,008.10
வட்டியல்லாத செலவு	62,047.64	60,556.95	69,056.76	81,610.08	78,825.12	83,567.76	97,646.19	1,11,675.69
சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட)	19,741.26	19,492.25	21,623.95	24,044.67	24,535.50	26,870.01	30,891.31	35,525.01
ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும்	9,137.34	8,255.88	10,107.62	11,339.35	10,883.82	11,940.74	13,368.03	14,972.19
ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும்	5,005.60	4,911.26	4,510.80	5,917.78	4,840.17	5,166.95	6,213.67	6,524.35
உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும்	17,103.71	19,615.02	20,482.63	25,811.28	23,824.76	25,622.59	28,184.85	32,412.58
ஏனைய வருவாய்ச் செலவினங்கள்	8.27	6.50	7.13	18.08	7.57	21.85	22.94	24.32
மூலதன ஒதுக்கீடு	10,497.67	8,572.59	11,582.67	13,575.32	14,127.39	13,131.49	17,953.36	21,184.97
நிகரக் கடன் வழங்கல்	553.79	–296.55	741.96	903.60	605.91	814.13	1,012.03	1,032.27
நிதிக் குறியீடுகள்								
முதன்மை உபரி (+) / பற்றாக்குறை (–)	–4,730.98	–5,159.20	–5,637.75	–9,642.09	–6,054.86	–4,685.74	–6,204.25	–7,455.94
வட்டி செலுத்துதல்	6,255.35	6,648.06	6,651.19	7,965.62	8,411.42	8,821.10	9,703.21	10,673.53
மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை	10.91%	12.00%	10.49%	11.07%	11.56%	11.18%	10.61%	10.24%
வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)	65.12	–3,531.22	35.68	–3,128.79	267.02	438.78	3,057.93	4,087.77
மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)%	0.11%	–6.37%	0.06%	–4.35%	0.37%	0.56%	3.34%	3.92%
நிதி உபரி(+) /பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)%	–0.59%	29.91%	–0.29%	17.77%	–1.85%	–3.25%	–19%	–23%
நிதி உபரி(+) / பற்றாக்குறை (–) (சரிக்கட்டப்பட்டவை)	–10.986.33	–11.807.26	–12,288.95	–17,607.71	–14.466.28	–13,506.84	–15.907.46	–18,129.47
மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி (+) / பற்றாக்குறை(–) சரிக்கட்டப்பட்டவை%	–2.96%	–2.54%	–2.73%	–3.40%	–2.96%	–2.32%	–2.43%	–2.46%
மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP)	3,70,943.00	4,64,009.00	4,50,474.00	5,18,576.00	4,87,996.00	5,81,635.00	6.54,340.00	7,36,132.00

இவை சில கணக்குகளிடையே மாற்றம் என்பதால் இந்த மதிப்பீடுகள் நிதிக் கணக்குகள் மற்றும் ஆண்டு நிதிநிலை அறிக்கையுடன் பொருந்தாது.

[2011 பிப்ரவரி 5

அட்டவணை – நடுத்தர

மார்ச் 2010 (1)	2008–2009 கணிப்புகள். (2)	2008–2009 கணக்குகள். (3)	2009–2010 கணிப்புகள். (4)
வருவாய்	49288.85	54653.69	57316.66
மாநிலத்தின் சொந்த வருவாய்	37494.75	39007.87	41377.15
வரி	34706.77	33684.37	38129.51
வரி அல்லாதவை	2787.98	5323.50	3247.64
மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை	11794.10	15645.81	15939.51
பங்கிடப்பட்ட வரிகள்	8475.31	8510.80	10921.14
உதவி மானியம்	3318.79	7135.01	5018.37
வட்டியல்லாத செலவு	51502.11	57249.88	62047.64
சம்பளங்கள் (கல்விக்கான அரசின் உதவி உட்பட)	17655.15	15995.26	19741.26
ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும்	7114.76	7719.19	9137.34
ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும்	4717.10	4567.56	5005.60
ஏனைய வருவாய்ச் செலவினங்கள்	9.31	11.19	8.27
உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும்	13892.75	18956.67	17103.71
மூலதன ஒதுக்கீடு	8333.04	9104.30	10497.67
நிகரக் கடன் வழங்கல்	–220.00	895.70	553.79
நிதிக் குறியீடுகள்			
முதன்மை உபரி (+) / பற்றாக்குறை (–)	–2213.26	–2596.20	–4730.98
வட்டி செலுத்துதல்	5800.89	5951.56	6255.35

இவை சரிக்கட்டப்பட்ட எண்கள் என்பதால் இந்த மதிப்பீடுகள் நிதிக்

2011 பிப்ரவரி 5]

கால நிதித் திட்டம் #

தற்போதைய விலையில் ரூபாய் கோடியில்

2009–2010 திருத்த மதிப்பீடு. (5)	2010–2011 கணிப்புகள். (6)	2010–2011 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (7)	2011–2012 கணிப்புகள். (8)	2012–2013 கணிப்புகள். (9)
53860.72	63419.01	62515.92	72770.26	82856.78
39366.84	46639.21	44963.78	52942.82	60448.50
35396.33	43400.25	41438.32	49311.60	56708.34
3970.51	3238.96	3525.46	3631.22	3740.16
14493.88	16779.80	17552.14	19827.44	22408.28
8757.78	10233.24	10401.69	11961.94	13756.24
5736.10	6546.56	7150.45	7865.50	8652.05
60016.83	69056.76	71091.30	78825.12	86556.47
19143.81	21623.95	22305.00	24535.50	25589.05
7988.69	10107.62	9894.38	10883.62	11372.20
4981.18	4510.80	4400.15	4840.17	5324.18
6.89	7.13	7.21	7.57	8.02
20055.34	20482.63	21658.87	23824.76	27398.47
8609.12	11582.67	12284.69	14127.39	16246.50
−768.21	741.96	540.99	605.91	618.03
−6156.10	−5637.75	−8575.38	−6054.86	−3699.69
6704.34	6651.19	7646.75	8411.42	9252.56

கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி விவர அறிக்கையுடன் பொருந்தாது.

[2011 பிப்ரவரி 5

மார்ச் 2010 (1)	2008–2009 கணிப்புகள். (2)	2008–2009 கணக்குகள். (3)	2009–2010 கணிப்புகள். (4)
மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை	11.77%	10.89%	10.91%
வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)	98.39	1452.25	65.12
மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–) %	0.20%	2.66%	0.11%
நிதி உபரி (+)/பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி(+)/பற்றாக்குறை (–)	–1.23%	–16.99%	–0.59%
நிதி உபரி (+) / பற்றாக்குறை (–) (சரிக்கட்டப்பட்டவை)	–8014.15	–8547.75	–10986.33
மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி (+) / பற்றாக்குறை (–) (சரிக்கட்டப்பட்டவை)	–2.58%	–2.42%	–2.96%
மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP)	310757	353432	370943

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 5]

2009–2010 திருத்த மதிப்பீடு. (5)	2010–2011 கணிப்புகள். (6)	2010–2011 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (7)	2011–2012 கணிப்புகள். (8)	2012–2013 கணிப்புகள். (9)
12.45%	10.49%	12.23%	11.56%	11.17%
–5019.54	35.68	–3396.45	267.02	3912.28
–9.32%	0.06%	–5.43%	0.37%	4.72%
39.03%	–0.29%	20.94%	–1.85%	–30.21%
–12860.45	–12288.95	–16222.13	–14466.28	–12952.25
–3.23%	–2.73%	–3.72%	–2.96%	–2.37%
397964	450474	436646	487996	547336

*****

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS